# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச் செய்தி எண்.28/2017 நாள்.27-09-2017

பெறுநர்

அனைத்து ஊடகங்கள்
சென்னை

அன்புடையீர், வணக்கம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் வெளியிடும் ஊடகச் செய்தி :-

### 01.07.2017 முதல் அகவிலைப்படி உயர்வு உடனே வழங்குக
### தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தல்!

மத்திய அரசு, அதன் ஊழியர்களுக்கு 7வது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை 1.1.2016 முதல் அமல் படுத்தி, மத்திய அரசு ஊழியர்கள் 1.1.2016 முதல் ஊதிய மாற்றத்தையும் அதற்கான நிலுவைத் தொகைகளையும் பெற்று விட்டனர். மேலும் அவர்களுக்கு 01.07.2017ம் தேதி முதல் புதிய ஊதிய மாற்றத்திற்கான அகவிலைப்படி உயர்வு 1 சதவீதத்தையும் மத்திய அரசு கொடுத்துவிட்டது. இதுவன்றி, மத்திய அரசின் 7வது ஊதிய மாற்றத்திற்கான ஊதிய விகிதங்களை பெறாமல் பழைய ஊதிய விகிதத்திலேயே ஊதியம் பெற்றுக் கொண்டிருக்கும் மத்திய அரசின் கீழ் இயக்கும் தன்னாட்சி நிறுவனத்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு பழைய ஊதிய விகிதத்தில் 3 சதவீத அகவிலைப்படியை 01.07.2017ம் தேதி முதல் உயர்த்தி மத்திய அரசு 26.09.2017ம் தேதி உத்தரவிட்டுள்ளது.

01.01.2016 முதல் தமிழக அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள், தாங்கள் பெற வேண்டிய ஊதிய மாற்றத்தையோ, அதற்கான நிலுவைத் தொகையையோ கடந்த 21 மாதத்களாக பெறாமல் கடுமையான நிதிச்சுமைக்கு ஆளாகியுள்ளனர். தமிழக அரசு ஊழியர்கள்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

ஆசிரியர்களுக்கான 8வது ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழுவை அமைப்பதற்கும், அது அமைக்கப்பட்ட பின்னர் அதன் பரிந்துரைகளை குறித்த காலவரைக்குள் சமர்ப்பிக்க தர்ணாக்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்ற பலவித இயக்க நடவடிக்கைகள் நடத்தியும், கடைசியில் அது பரந்துபட்ட அரசு ஊழியர், ஆசிரியர்களின் ஒன்றுபட்ட பேரெழுசசியாக உருவெடுத்து, வேலைநிறுத்தப் போராட்டமாக பரிணமித்த பின், நீதிமன்றத் தலையீட்டால் கண்டிப்பான காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட பின் தற்போது முதன்முறையாக சொன்ன காலவரையரைக்குள் அலுவலர் குழு தனது பரிந்துரையை சமர்ப்பித்துள்ளது . இந்த பரிந்துரைகள் காலதாமதமாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டாலும், அறிக்கையில் வழங்கப்பட்ட பரிந்துரைகள் என்ன என்பது தெரியாத போதிலும் நீதிமன்ற உத்தரவுக்குப் பின்னர் இன்று (27-09-2017) அலுவலர் குழுவின் இறுதி அறிக்கை அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்நிலையில் இதன்காரணமாக தமிழக அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் கடுமையான நிதித் தேவைக்கு ஆளாகியுள்ளனர். மேலும் தீபாவளி பண்டிகை தினம் நெருங்கி வரும் வேளையில் தமிழக அரசு ஊழியர்களின் இந்த கடினமான நிலையை கருத்தில் கொண்டு, மத்திய அரசு பழைய ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் தன் ஊழியர்களுக்கு 01.07.2017ஆம் தேதி முதல் அகவிலைப்படி உயர்வு அளித்துள்ளது போல், தமிழக முதல்வரும் தமிழக அரசு ஊழியர்களுக்கு 01.072017 முதல் பழைய ஊதிய விகிதத்தின் அடிப்படையில் அகவிலைப்படியை உயர்த்தி, உடனடியாக அறிவித்திட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி கேட்டுக்கொள்வதோடு, ஜூலை 2017 முதல் செப்டம்பர் 2017 வரையிலான மூன்று மாதகால அகவிலைப்படி உயர்வு நிலுவைத் தொகையை தமிழக அரசு ஊழியர்கள் ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளவும் உத்தரவிட வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(மு. அன்பரசு)
பொதுச்செயலாளர்